# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## நான்காம் திருவாய்மொழி - ஆடியாடி
## நித்யஸூரிகளோடு கூடப்பெறாமையால், மிக வாட்டமுற்று மயங்கிய பராங்குச நாயகியின் நிலையைத் தாய் கூறும் பாசுரம்

** ஆடி ஆடி அகம் கரைந்து * இசை
பாடிப் பாடிக் * கண்ணீர் மல்கி ** எங்கும்
நாடி நாடி * நரசிங்கா! என்று *
வாடி வாடும் * இவ்வாணுதலே 1

வாணுதல் இம்மடவரல் * உம்மைக் *
காணும் ஆசையுள் நைகின்றாள் ** விறல்
வாணன் ஆயிரம் * தோள் துணித்தீர்! * உம்மைக்
காண * நீர் இரக்கம் இலீரே 2

இரக்க மனத்தோடு * எரி அணை *
அரக்கு மெழுகும் ஒக்கும் இவள் **
இரக்கம் எழீர் * இதற்கு என் செய்கேன்? *
அரக்கன் இலங்கை * செற்றீருக்கே 3

இலங்கை செற்றவனே! * என்னும் * பின்னும்
வலங்கொள் புள் உயர்த்தாய்! என்னும் ** உள்ளம்
மலங்க * வெவ்வுயிர்க்கும் * கண்ணீர் மிகக்
கலங்கிக் * கை தொழும் நின்று இவளே 4

இவள் இராப் பகல் * வாய் வெரீஇ * தன
குவளை * ஒண் கண்ண நீர் கொண்டாள் ** வண்டு
திவளும் * தண்ணந்துழாய் கொடீர் * என
தவள வண்ணர் * தகவுகளே 5

தகவு உடையவனே! என்னும் * பின்னும்
மிக விரும்பும் * பிரான் என்னும் ** எனது
அக உயிர்க்கு * அமுதே! என்னும் * உள்ளம்
உக உருகி * நின்று உள்ளுளே 6

உள்ளுள் ஆவி * உலர்ந்து உலர்ந்து * என
வள்ளலே! * கண்ணனே! என்னும் ** பின்னும்
வெள்ள நீர்க் * கிடந்தாய் என்னும் * என
கள்வி தான் * பட்ட வஞ்சனையே 7

வஞ்சனே! என்னும் * கை தொழும் * தன
நெஞ்சம் வேவ * நெடிது உயிர்க்கும் ** விறல்
கஞ்சனை * வஞ்சனை செய்தீர்! * உம்மைத்
தஞ்சம் என்று * இவள் பட்டனவே! 8

பட்ட போது * எழு போது அறியாள் * விரை
மட்டலர் * தண்துழாய் என்னும் ** சுடர்
வட்ட வாய் * நுதி நேமியீர்! * நுமது
இட்டம் என்கொல் * இவ்வேழைக்கே? 9

ஏழை பேதை * இராப் பகல் * தன
கேழ் இல் * ஒண் கண்ண நீர் கொன்டாள் ** கிளர்
வாழ்வை வேவ * இலங்கை செற்றீர்! * இவள்
மாழை நோக்கு * ஒன்றும் வாட்டேன்மினே 10

** வாட்டம் இல் புகழ் * வாமனனை * இசை
கூட்டி * வண் சடகோபன் சொல் ** அமை
பாட்டு * ஓர் ஆயிரத்து இப்பத்தால் * அடி
சூட்டல் ஆகும் * அந்தாமமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---